**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 537/2018** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ராஜமாணிக்கம் | **வயது** | : | 65 |
| **த.பெ** | : | கோவிந்தராஜ் | **தாலுக்கா** | : | சேத்பட் |
| **கிராமம்** | : | ஊத்தூர் | **தொழில்** | : | கூலிவேலை |

**01.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை**

1)இந்த வழக்கு நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பூர்வீக சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன். பூர்வீக சொத்தில் நான் என்ன பரிகாரம் கோருகிறேன் என்றால் என்னுடைய பங்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா பெயர் வெங்கடாசலம் என்றால் சரிதான். மேற்படி வெங்கடாசலம் அவர்களுக்கு ஜானகிராமன், கோவிந்தராஜ், மற்றும் சாமிகவுண்டர் ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். நான் 2 ம் மகன் கோவிந்தராஜ் மகன் என்றால் சரிதான். திருத்தப்பட்ட தாவாவில் என் தந்தை பெயர் கோவிந்தராஜ் பதிலாக கோவிந்தசாமி என்று இருந்தால் தவறு என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது.

2)வழக்கு சங்கதிகள் அனைத்தும் நான் தான் என் வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் சரிதான். நீங்கள் சரியாக என் வழக்கறிஞரிடம் கூறியிருந்தால் என் தந்தை பெயர் சரியாக தாவாவில் குறிப்பிட்டிருக்கும் என்றால் நான் சரியாகதான் வழக்கறிஞரிடம் கூறினேன். வா.சா.ஆ-9 ஆவணப்படி சர்வே நெம்பர் 49/1 ன் கீழ் 87 செண்டில், 27 ½ செண்ட் கிரையமானது 09.05.1990 ல் குப்ப கவுண்டர் குமாரர் சாமிகவுண்டர் அவர்களுக்கு வெங்கடாசல கவுண்டர் மகன் சாமிகவுண்டர் கிரையம் கொடுத்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சாமிகவுண்டர் தான் என் சித்தப்பா என்றால் சரிதான்.

3)ஆனால் என் வாதுரையில் 3 ம் பத்தியில் 87 செண்டில் 35 செண்ட் என் சித்தப்பா சாமிகவுண்டருக்குஒதுக்கப்பட்டது என்று கூறியுள்ளேன், அப்படியென்றால் மேற்படி வா.சா.ஆ-9 ஆவணப்படி 27 ½ செண்ட் சரியானதா, அல்லது 35 செண்ட் சரியானதா என்றால் 27 ½ செண்ட் தான் சரியானது. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் என் தந்தை சொத்து ஏதும் எழுதிவைக்காமல் காலமாகிவிட்டார் என்று குறிப்பிடடுள்ளேன், ஆனால் பிரதிவாதி தனது 3 ம் பத்தியில் 30.04.1971 ல் 82 செண்டில் 27 ½ செண்ட் என் தந்தை என் பெரியப்பா ஜானகிராமன் அவர்களுக்கு கிரையம் கொடுத்தாக குறிப்பிடடுள்ளார் ஆனால் நான் தவறாக 1974 ல் கிரையம் கொடுத்ததாக நான் தவறாக கூறிகிறேன் என்று சொன்னால் 1950 முதல் 1975 வரை என் தாத்தா யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை.

4)30.04.1971 ல் வெங்கடாசல கவுண்டர் குமாரர் கோவிந்தராஜ் கவுண்டருக்கு எழுதிகொடுத்ததாக உள்ளது அப்படியென்றால் வெங்கடாசல கவுண்டர் குமாரர் கோவிந்தராஜ் என்று வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் வேறு யாரும் இல்லை. பிரதிவாதி தனது பதிலுரையை 20.12.2010 ல் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி 30.04.1971 ல் மேற்படி கிரையம் பெற்றதாக குறிப்பிடபட்டுள்ளார், மேற்படி சங்கதி உண்மையா, பொய்யா என்பதற்கு நான் புகார் அளித்தும், அல்லது கைரேகை நிபுணரிடம் பரிசோதனை செய்வதற்காக அனுப்பினேனா என்றால் அப்படி எதுவும் புகார் அளிக்கவில்லை. உண்மையிலேயே உங்கள் அப்பா கிரையம் கொடுக்காதிருந்தால் நான் மேற்படி ஆவணத்தை பெற்று அதனை கைரேகை நிபுணர் பரிசோதனைக்கு உட்படுத்தியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

5)**வா.சா.ஆ-2** நோட்டீசானது நான்தான் சாமிகவுண்டர், கண்ணம்மாள், வள்ளியம்மாள், தேவராஜ், சேத்பட் சார்பதிவாளர் ஆகியோருக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரிதான். **வா.சா-ஆ.2** நோட்டீசை பெற்றுகொண்டு கண்ணம்மாள் மற்றும் வள்ளியம்மாள் அவர்கள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அனுப்பவில்லை. **வா.சா-ஆ 5** பதில் அறிவிப்பை எங்கள் தரப்பில் நானே குறியீடு செய்துள்ளேன் என்றால் அது சரியாக எனக்கு நினைவில்லை. நான் எதற்காக சேத்பட் சார்பதிவாளர் அவர்களுக்கு **வா.சா.ஆ-7** நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சேத்பட் சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் தாவா சொத்து குறித்து பதிவுசெய்ய இருந்தார்கள் ஆகையால் நான் நோட்டீஸ் அனுப்பினேன்.

6)ஆனால் தாவாசொத்துக்கள் களம்பூர் சார்பதிவாளர் அதிகாரவரம்பில் வருவதால் நான் வேண்டுமென்றே சேத்பட் சார்பதிவாளர் அவர்களுக்கு பிரதிவாதிகளுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும் என்பதற்காக அனுப்பினேன் என்றால் சரியல்ல. என் பெரியப்பா ஜானகிராமன் இறந்தபிறகு வள்ளியம்மாள்(மனைவி) மற்றும் கண்ணம்மாள்(மகள்) ஆகியோர் அவர்களின் வாரிசு என்றால் சரிதான். என் பெரியப்பா இறந்தபிறகு அவரது வாரிசுகளான வள்ளிம்மாள் மற்றும் கண்ணம்மமாள் அவர்கள் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை அவர்கள் பெயருக்கு சிட்டா எண் 227, 631, 820 மாற்றிகொண்டார்கள் என்றால் அதுஎனக்கு தெரியாது.

7)என் தந்தையிடம் கிரையம் கொடுத்த 27 ½ செண்ட், மற்றும் ஜானகிராமன் அவருக்குண்டான 27 ½ செண்ட் பாகம் சேர்த்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவர்களுக்கு மொத்தம் 55 செண்ட் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு மேற்படி பாத்தியப்பட்ட 55 செண்டில் 3 ம் பிரதிவாதிக்கு 52 செண்ட் கிரையம்கொடுத்தார்கள் என்றால் அதற்கு முன்பே நான் மேற்படி செண்டை விற்ககூடாது என்று நோட்டீஸ் அனுப்பிவிட்டேன். என் தந்தை அவரின் சகோதரர் ஜானகிராமனுக்கு தாவாசொத்தை கிரையம்கொடுத்தபிறகு அதில் என்கது எந்த உரிமை இல்லை என்றும், மேற்படி தாவாசொத்தை 3 ம் பிரதிவாதிக்கு 1,2 பிரதிவாதிகள் **வா.சா.ஆ-4** முன்னிலைக்கு கிரையம்கொடுத்தது செல்லும் என்றால் சரியல்ல.

8) நான் சாமிகவுண்டர், மற்றும் சேத்பட் சார்பதிவாளர் அவர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என் இந்த வழக்கில் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் நான் சேர்த்துள்ளேன். நான் கூறுவது சாமிகவுண்டர் அவர்களையோ, மற்றும் சேத்பட் சார்பதிவாளர்

அவர்களையோ இந்த வழக்கில் சேர்க்கபடவில்லை என்றால் சரியல்ல, நான் சேர்த்துள்ளேன். நான் இந்த வழக்கில் **வா.சாஆ.4** ஆவணமான 20.09.2006 கிரையபத்திரத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் உரிமை உண்டு. தாவா சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் யாரும் அனுபவித்து வரவில்லை, தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்தபிறகு சும்மாதான் உள்ளது. நான் கூறுவது தவறு தாவாசொத்தானது 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து அவர் 15.04.2013 அன்று முருகன் மனைவி காமாட்சி அவர்களுக்கு தாவாசொத்தில் ஒருபகுதியை கிரையம் கொடுத்து மேற்படி காமாட்சி அவர்கள் அனுபவித்து வருகிறார் என்றால் தாவாசொத்தில் யாருக்கும் விற்கபடவில்லை மற்றும் யாருடைய அனுபவத்திலும் இல்லை.

9)1,2 பிரதிவாதிகளிடமிருந்து **வா.சா.ஆ.4** முன்னிலைக்கு 3ம் பிரதிவாதி கிரையம்பெற்ற பிறகு அவர் பெயருக்கு பட்டா எண் 227 ல் பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார் என்று சொன்னால் தவறு. நான் 3ம் பிரதிவாதி அவர்பெயருக்கு மேற்படி பட்டாமாற்றம் செய்தது இந்நாள் வரை செய்தது தெரியாது என்றால் சரிதான். நான் தாவாசொத்து இருக்கும் கிராமத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் நான் மெட்ராசிற்கு வேலைக்கு போய்போய் வருவேன் ஆனால் தாவா சொத்து இருக்கும் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். எனக்கு 3ம் பிரதிவாதி கைிரையம் பெற்ற விவரமும், அவர் பெயருக்கு பட்டாமாற்றம் செய்த விவரமும் முன்னரே தெரியும் நான் வேண்டுமென்றே பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்கதில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ஆகையால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

10)என் தந்தை கோவிந்தராஜ் அவர்களுக்கு ராணி என்கிற மகள் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி ராணியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான் எதற்காக சேர்க்கவேண்டும். என் தந்தைக்கு நான் மட்டும் வாரிசல்ல, அவரது மகள் ராணியும் வாரிசு ஆகையால் நான் அவரையும் இந்த வழக்கில் இணைத்திருக்க வேண்டும் மேலும் என் தந்தையே தாவாசொத்தை என் பெரியப்பா ஜானகிராமனுக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலக் சரியல்ல. நான் கோரும் எந்த பரிகாரமும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.11.03 10:45:25 +0530

District Munsif,
Polur.